**கவனிக்க.-** 2015.05.22 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.-** இம்முறை வெளியாகும் வர்த்தமானப் பத்திரிகை பகுதி V இல் 2012 ஆம் ஆண்டு யூன் முதல் செத்தெம்பர் வரையான காலாண்டிற்கான அச்சீட்டாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதியப்பட்டுள்ள புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் வெளியிடப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1917 - 2015 මැයි මස 29 වැනි සිකුරාදා - 2015.05.29

*1917 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 700 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 703 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூன் மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான ''புதிய சேர்வாளர்கள்'' ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலினை திருத்துதல் - கண்டி மாவட்டம்

*2015.03.20 ஆந் திகதிய 1907 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பம் கோரல் அறிவித்தல் அட்டவணையில் கீழே காட்டப்பட்டுள்ள பிரிவு மற்றும் பதவிகள் மாத்திரம் கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் திருத்தப்படல் வேண்டும் எனவும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி இந்தப் பிரிவிற்கு மாத்திரம் 2015.06.22 ஆந் திகதி எனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.*

*2. அவ்விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அதிலுள்ளவாறே மாற்றமின்றி இருக்கும் என்பதனை தயவுடன் கருத்திற்கொள்ளவும்.*

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் - முன்னர் குறிப்பிடப்பட்ட விதம் | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் - திருத்தப்பட வேண்டிய விதம் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|---|
| கண்டி | யட்டிநுவர | மெதபலாத பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடபலாத பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மெதபலாத பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடுநுவர மற்றும் யட்டிநுவர பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

5-665

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர்கள் (சட்டம்) பதவிக்கான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பம் கோரல் - 2015

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிகளில் நிலவுகின்ற 15 வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப் பிற்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அலுவலகம், இலக்கம் 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவி" என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(அ) விண்ணப்ப முடிவுத் திகதி 2015.06.30 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதம் தபாலில் காணாமல் போதல் அல்லது தபாலில் ஏற்படும் தாமதம் பற்றி முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதப்படுத்துவதால் ஏற்படக்கூடிய நட்டங்களை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை**.- கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையொன்றின் பின்னர் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப திறமை ஒழுங்கில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனங்கள் நடைமுறைக்கு வரும் திகதி என்பன அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கு இணங்கத் தீர்மானிக்கப்படும்.

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு நிதியைச் செலுத்துதல் வேண்டும்.

(ii) இப்பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று (3) ஆண்டு தகுதிகூர் நிலை காலத்திற்கு உட்படுத்தப்படுவதோடு அம்மூன்றாண்டு (3) காலத்தினுள் முதலாம் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். (தற்போது அரச சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்படுமிடத்து அவர் ஒரு வருட பரீட்சார்த்த காலத்திற்கு உட்படுத்தப்பட்டு நியமிக்கப்படுவார்.)

(iii) பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 7/2007, 01/2014 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றுநிருபங்களுக்கு அமைய நியமனத் திகதியிலிருந்து ஐந்து (5) ஆண்டுகளுக்குள் மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத,

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும் அரச நிதிப் பிரமாணங்களுக்கும் ஆணைக்குழுவின் ஏனைய கட்டளைகளுக்கும் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கும் இந்நியமனம் உட்பட்டிருக்கும்.

*3.* ***சம்பள அளவுத்திட்டம்.***- இப்பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.- 28,095 - 5 X 645 - 5 X 790 - 15 X 1,050 - 51,020 (சம்பளக் குறியீடு எஸ்எல் 5 - 2006)

**4. தேவையான தகைமைகள்.**- கல்வி/தொழில் தகைமைகள் மற்றும் அனுபவம்.- உயர் நீதிமன்றச் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும். பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும். துறைசார்ந்த அனுபவம் விசேட தகைமையாகக் கருதப்படும்.

5. **வயதெல்லை.**- 2015.06.30 ஆந் திகதிக்கு 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச/மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

6. **உடற் தகைமை :**

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும்,

(ii) பதவியில் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் உள ஆரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

7. **வேறு தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பதவியில் சேர்த்துக்கொள்வதற்கான சகல தகைமைகளையும் பூரணப்படுத்தியிருப்பதோடு விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில்/வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் அனைத்துத் தகைமைகளையும் எல்லாவிதத்திலும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

8. **நேர்முகப் பரீட்சை :**

8.1 கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை.- அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் புள்ளிகள் வழங்கப்படும்.

8.2 நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் முறை பற்றிய விரிவான விபரம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளது :

| பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | உச்ச புள்ளிகள் | தேர்ந்தெடுக்கப்படுவதற்காக கருத்தில் கொள்ளப் படும் ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| கல்வித் தகைமைகள் | 20 | |
| துறைசார்ந்த செயற்பாடுகள் | 20 | |
| சட்டத்தரணியாக நீதித்துறையில் பெற்றுள்ள அனுபவம் :<br>1. மன்றில் வழக்குகளை நடாத்திச் சென்ற அனுபவம்<br>2. சட்ட உத்தியோகத்தராக சட்ட மா அதிபர் திணைக்களம் அல்லாத அரச திணைக்களத்தில் சேவையாற்றிய அனுபவம்<br>3. சட்ட மா அதிபருக்காக வழக்குத் தொடுத்தல்/ மன்றில் ஆஜராகுதல் சம்பந்தமாக பெற்றுக் கொண்ட அனுபவம் | 20 | வேண்டப்படுவதில்லை |
| குற்றவியல் சட்டம், நடைமுறைச் சட்டப் பிரச்சினைகள், புதிய கட்டளைச் சட்டங்கள் மற்றும் இலஞ்சம் அல்லது குற்றவியலுடன் தொடர்புடைய வழக்குத் தீர்ப்புகள் தொடர்பாக உள்ள அறிவு | 20 | |
| மொழித் தேர்ச்சி | 10 | |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டப்படும் திறமைகள் | 10 | |
| மொத்தம் | 100 | |

9. (i) விண்ணப்பப்பத்திரம் 22 - 29 சென்றி மீற்றர் அளவான ஏ4 கடதாசியில் தயாரிக்கப்படல் வேண்டும். 1 தொடக்கம் 9 வரையிலான தலைப்புகள் முதலாம் பக்கத்தில் அமையுமாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் குறிப்பிட்ட விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் தெளிவாக நிரப்பப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தை ஒத்திராத விண்ணப்பங்களும், பூரணப்படுத்தப்படாத விண்ணப் பங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். ஏற்புடைய விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை விண்ணப்பதாரி தன்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் பத்திரம் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப் பத்திரத்தை ஒத்துள்ளதா என்பது பற்றி விண்ணப்பதாரி அறிந்து கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

(ii) விண்ணப்பதாரியின் அடையாளம்.- அறிவிக்கப்படுகின்றபோது விண்ணப்பதாரிகள் பின்வரும் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(1) கல்விச் சான்றிதழ்கள் ;
(2) பிறப்புச் சான்றிதழ்கள் ;

(3) தேசிய ஆள் அடையாள அட்டை ;

(4) அனுபவம் பற்றிய சான்றிதழ் (நீதிமன்ற அலுவலர் ஒருவரால் அல்லது ஆகக்குறைந்தது 10 வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவமுடைய சட்டத்தரணி ஒருவரினால் வழங்கப்படும் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

(5) நடத்தை பற்றிய சான்றிதழ்கள் இரண்டு (இதில் ஒன்று பிரதேச செயலாளரினால் மேல் ஒப்பமிடப்பட்டு கிராம அலுவலரினால் வழங்கப்படும் சான்றிதழாக இருத்தல் வேண்டும்.

**கவனிக்க வேண்டியவை :**

(அ) விண்ணப்பப்படிவத்துடன் எதுவித சான்றிதழ்களோ அதன் பிரதிகளோ இணைத்தனுப்புதல் ஆகாது.

(ஆ) கோரப்படுகின்றபோது ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் தொழில் புரியும் திணைக்கள/ நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபரினால்/ சமாதான நீதவான் ஒருவரினால்/சத்தியப்பிரமாண ஆணையாளரினால்/ சட்டத்தரணி ஒருவரினால்/ பிரசித்திபெற் நொத்தாரிசு ஒருவரினால்/ முப்படைகளில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது 22,935 ரூபாவை மாதாந்த ஒன்றுதிரட்டிய சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்கப் பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

10. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள், காலத்திற்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள், குறிப்பிட்ட சேவைக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுடனான நிபந்தனைகள் இப்பதவிக்கு ஏற்புடையனவாகும்.

11. வெற்றிடங்களை நிரப்புவது, நிரப்பாமல் விடுவது அல்லது வெற்றிடங்களில் ஒரு பகுதியை மட்டும் நிரப்புவது பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

(திருமதி) டில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க,
சனாதிபதி சட்டத்தரணி,
பணிப்பாளர் நாயகம்,
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப்
புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு.

இல. 36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 7,
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப்
புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அலுவலகம்,
2015, வைகாசி 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப்
புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவி)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) : -- --.

(ii) முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.

2. முகவரி :

(i) தனிப்பட்ட முகவரி :----.

(ii) அலுவலக முகவரி (அரச சேவையாளர் எனில்) :----.

3. பிறந்த திகதி :

(i) ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

(ii) 2015.06.30 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

[ | | | | | | | | | ]

5. இனம் :----.

6. பால் (ஆண்/பெண்) :----.

7. (i) கல்வித் தகைமைகள் :----.

(ii) தொழில் தகைமைகள் :----.

(iii) 2015.06.30 ஆந் திகதிக்கு தொழில் அனுபவம் :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

8. தாங்கள் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டவரா ? அல்லது பதவி வெறிதாக்கப்பட்டவராக கருதப்பட்டவரா ? என்பது பற்றிய விபரம் :----.

9. (i) ஏதும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளீரா ? :----.

(ii) ஆமெனில் அதுபற்றிய விபரம் :----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் சான்று பகர்கின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயம் உண்மையற்றது அல்லது பிழையானது என என்னைத் தெரிவுசெய்வதற்கு முன்பு தெரியவருமாயின் நான் தகுதியற்றவனாகக் கருதப்படுவேன் என்பதையும் நியமனத்தின் பின் தெரியவருமாயின் இழப்பீடு ஏதுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

..................................... எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்ட திரு./ திருமதி/ செல்வி ......................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், 2015 ஆம் ஆண்டு ................. மாதம் ................. திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் :----.
பெயரும் பதவியும் :----.
முகவரி :----.
பதவி முத்திரை :----.

**குறிப்பு**.- தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களின் கையொப்பத்தை உறுதிப்படுத்துவது குறிப்பிட்ட திணைக்களத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரர் அரசாங்க சேவையைச் சேர்ந்தவராயின்-

திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

திரு./ திருமதி/ செல்வி ................................ இத்திணைக்களத்தில் சேவையாற்றுகிறார். அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திணைக்களம் :----.
(பதவி முத்திரையுடன்)
திகதி :----.

5-820

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**விவசாயத் திணைக்களம்**

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை - 2015

**விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்புளோமா கற்கை நெறி - 2016/2018**

இலங்கை விவசாயக் கல்லூரிகளில், 2016/2018 ஆம் ஆண்டிற்கான விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை, பரீட்சைத் திணைக்களத்தால் சிங்களம்/ தமிழ் ஆகிய மொழிகள் மூலம் 2015, செத்தெம்பர் மாதத்தில் குறிப்பிட்ட நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப் படும்.

2. **விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கை நெறி :**

2.1 விவசாயத் திணைக்களத்தால் இலங்கை விவசாயக் கல்லூரிகளில் நடாத்தப்பட்ட விவசாய டிப்ளோமா பாடநெறியானது விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கைநெறி என பெயரிடப்பட்டுள்ளதுடன் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின்கீழ் தற்போது பதிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பாடநெறிக்கு தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) தரம் 6 அளிப்பதற்காக சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

2.2 விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான மேற்படி பாடநெறி ஆண், பெண் இருபாலாருக்கும் நடாத்தப்படுவதுடன் இப்பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வில் சித்தியடைபவர்கள் திறமை மற்றும் மாவட்ட அடிப்படையில் அங்குணகொலபெலஸ்ஸ, கரப்பிஞ்ச, குண்டசாலை, பெல்வெஹெர, வவுனியா ஆகிய விவசாயக் கல்லூரிக்கு தெரிவுசெய்யப்படுவார்கள்.

2.3 நேர்முகப் பரீட்சையில் தகைமை பெற்றவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் மாத்திரம் பரீட்சிக்கப்படும்.

2.4 இக்கற்கைநெறி முதலாம் வருடத்தில் சிங்களம், தமிழ் மொழிகளிலும் இரண்டாம் வருடத்தில் ஆங்கில மொழியிலும் நடத்தப்படும். இதற்கமைய அகுனுகொலபெலஸ்ஸ, கரபிஞ்ச, பெல்வெஹர ஆகிய விவசாயக் கல்லூரிகளில் முதலாம் வருடம் சிங்கள மொழியிலும், வவுனியா விவசாயப் பாடசாலையின் முதலாம் வருடம் தமிழ் மொழியிலும், குண்டசாலை விவசாயக் கல்லூரியில் முதலாம் வருடம் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்படும். சகல பாடசாலைகளிலும் இரண்டாம் வருட கற்கை நெறிகள் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படும்.

2.5 இக்கற்கை நெறியைப் பூர்த்திசெய்வதற்கு விவசாயப் பாடசாலைகளில் 2 வருட பயிற்சியின் பின்னர் 6 மாத காலத்திற்கு ஒரு நிறுவனத்தில் தொழில்சார் பயிற்சியைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

2.6 இப்பயிற்சி நெறியின்போது கல்லூரி விடுதியில் தங்கியிருத்தல் கட்டாயமானதாகும்.

3. **அனுமதி பெறுவதற்கான தகைமைகள் :**

3.1 (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களிலும் கட்டாயமாக திறமைச் சித்தி பெற்றிருப்பதோடு, சமூகக்கல்வி, விவசாயம், வரலாறு அல்லது வாழ்க்கைத் திறன் மற்றும் குடியுரிமை கற்கை அல்லது விவசாய உணவுத் தொழில்நுட்பம் அல்லது பூங்கனியியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுள் ஏதாவது

ஒன்றில் திறமைச் சித்தியுடன் (இதன்படி மொத்தம் நான்கு (4) திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்). இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இவ்விரண்டு அமர்வுகளில் ஒன்றில் மூன்று (3) திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஐந்து (5) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி தாவரவியல், இரசாயனவியல், பௌதீகவியல், விலங்கியல், விவசாயம், உயிரியல் ஆகிய ஆறு பாடங்களில் ஏதாவது மூன்றில் (3) ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும். (இத்தகைமைகளைக் கொண்டிருப்பவர்களுக்கு தெரிவின்போது மாவட்ட அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும்.)

அல்லது

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று (3) பாடங்களிலும் கட்டாயமாக திறமை சித்தி பெற்றிருப்பதோடு, சமூகக்கல்வி, விவசாயம், வரலாறு அல்லது வாழ்க்கைத் திறன் மற்றும் குடியுரிமை கற்கை அல்லது விவசாய உணவுத்திட்ட தொழில்நுட்பம் அல்லது பூங்கனியியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒன்றில் திறமைச் சித்தியுடன் (இதன்படி மொத்தம் நான்கு (4) திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.) இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இவ்விரண்டு அமர்வுகளில் ஒன்றில் மூன்று (03) திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஐந்து (5) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி தாவரவியல், இரசாயனவியல், பௌதீகவியல், விலங்கியல், விவசாயம், உயிரியல் ஆகிய ஆறு பாடங்களில் ஒன்று (1) அல்லது இரண்டு (2) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (க. பொ. த. (உ. த.) கணிதப் பிரிவில் கற்ற மாணவர்கள், இரசாயனவியல் அல்லது பௌதீகவியல் பாடங்களில் சித்தியடைந்திருத்தல், இக்கற்கை நெறிக்கு அனுமதி பெறுவதற்கான தகுதியாகக் கருதப்படமாட்டாது). இத்தகைமைகளைப் பெற்றிருப்பவர்கள் 3.1 (அ) பந்திக்கு ஏற்ப விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுள் தகைமையுள்ளவர்கள் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அம்மாவட்டத்தில் மேலும் வெற்றிடங்கள் காணப்பட்டால் மட்டுமே தெரிவு செய்யப்படுவர்.

3.2 ***வயது***.- 2015.06.29 ஆந் திகதியன்று விண்ணப்பதாரிகள் 17 வயதிற்குக் குறையாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அரச சேவையில் தொழில் புரிபவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராகமாட்டார்.

**4. பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல் :**

4.1 இவ்விளம்பரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப, விண்ணப்பங்கள், விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தினால் அல்லது தட்டச்சு செய்யப்பட்டு 8" x 12" (A4 அளவு) அளவுள்ள தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தினைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் பரீட்சையின் பெயரை தமிழுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். 1 முதல் 10 வரையான விபரங்கள் முதல் பக்கத்தில் அடங்குதல் வேண்டும். 11 முதல் 14 வரை இரண்டாவது பக்கத்திலும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் அடங்குமாறு தயாரிக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப அமைந்துள்ளதா என விண்ணப்பதாரி பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்.

4.2 ***பரீட்சைக் கட்டணம் 700 ரூபா***.- விண்ணப்பதாரியினால் 700 ரூபா மக்கள் வங்கியில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் 057100179027204 எனும் வங்கிக் கணக்கிலக்கத்திற்கு பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். காசைச் செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் சரியான இடத்தில் கழன்றுவிடாமல் பசையால் ஒட்டி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். மேலும் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமாகும். எக்காரணத்தைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சை கட்டணத்தை வேறு எப்பரீட்சைக்காகவும் மாற்றவும் முடியாது. இப்பரீட்சை கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு இணைத்து அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

4.3 விண்ணப்பங்கள் 2015, யூன் மாதம் 29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர், விரிவாக்கற் பயிற்சி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில், அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் தாமதமாகும் அல்லது காணாமற்போகும் விண்ணப்பங்களுக்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்காது.

4.4 விண்ணப்பத்தை அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "விவசாயக் கல்லூரிகளுக்கான அனுமதி 2016-2018" என்னும் வாக்கியம் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

5. **பரீட்சை நிலையங்கள்**.- 2016/2018 ஆம் ஆண்டுகளுக்கான விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா பாடநெறி சம்பந்தமான விவசாயக் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை, பரீட்சைத் திணைக்களத்தினால் தமிழ், சிங்களம் மொழிமூலம் 2015, செத்தெம்பர் மாதத்தினுள் பின்வரும் நகரங்களில் உள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும் :

| பரீட்சை நடைபெறும் நகர இல. | பரீட்சை நடைபெறும் நகரம் | பரீட்சை நடைபெறும் நகர இலக்கம் | பரீட்சை நடைபெறும் நகரம் |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | 08 | குருநாகல் |
| 02 | பதுளை | 09 | மாத்தறை |
| 03 | மட்டக்களப்பு | 10 | திருகோணமலை |
| 04 | கொழும்பு | 11 | வவுனியா |
| 05 | காலி | 12 | இரத்தினபுரி |
| 06 | யாழ்ப்பாணம் | 13 | அம்பாந்தோட்டை |
| 07 | கண்டி | 14 | கிளிநொச்சி |

குறிப்பிட்ட பரீட்சை நிலையமொன்றுக்குப் போதியளவு எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பில் தெரிவான பரீட்சை நிலையம் அல்லது பரீட்சார்த்திகள் விண்ணப்பித்த நகரத்திற்கு அண்மையிலுள்ள வேறு ஒரு நிலையம் அவர்களுக்கு வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த நகரம்/ நகரங்களையோ, போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மொழி மூலத்தையோ பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

6. **பரீட்சை முறைமை**.-

6.1 எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள், கால அட்டவணை என்பன கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

| | விடயங்கள் | கால அளவு | காலம் |
|---|---|---|---|
| (i) | முதலாம் வினாத்தாள் (I) விவசாயம் (100 புள்ளிகள்) க. பொ. த. (சா. த.) விவசாய பாடப்பரப்பிற்கு அமைவானதும் விவசாயத் துறையோடு தொடர்பான பொது விடயங்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட பல்தேர்வு, சுருக்க வினாக்கள் அடங்கியது). எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். | 1 மணித்தியாலம் | 09.30 மணி - 10.30 மணி |
| (ii) | இரண்டாம் வினாத்தாள் (II) விவேகப் பரீட்சை (100 புள்ளிகள்) (ஒழுங்கமைப்பு, தொடர்பு காணல் ஊகித்தல், ஒப்பிடுதல், பகுத்தறிதல் போன்ற திறன்களை மதிப்பிடுவதற்கானது) பல்தேர்வு சுருக்க வினாக்கள் 50 ஐ உள்ளடக்கியது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். | 1 மணித்தியாலம் | 11.00 மணி - 12.00 மணி |

6.2 3.1, 3.2 ஆகிய பந்திகளில் குறிப்பிட்டுள்ள தகைமைகளையுடைய சகல விண்ணப்பதாரிகளுக்கும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய அனுமதிப்பத்திரங்களை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். பிரவேசப்பத்திரங்களை பரீட்சைத் திணைக்களம் அஞ்சல் செய்தவுடன் உடனடியாக அது தொடர்பாக விளம்பரம் ஒன்று பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். பரீட்சைக்கான விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தினத்தின் பின்பு 2 அல்லது 3 நாட்களில் பிரவேசப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து அவ்விளம்பரத்தில் குறிப்பிட்டவாறு தமது தொலைநகல் இலக்கத்துடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கவும். அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவர்கள் தம்மிடம் இருக்கும்-

(அ) விண்ணப்பப்பத்திரத்தின் நிழற்படப் பிரதி ;

(ஆ) பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ;

(இ) பதிவுத்தபால் பற்றுச்சீட்டு என்பவற்றுடன் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளவும்.

6.3 பரீட்சைத் திணைக்களத்தினால் விண்ணப்பதாரிகள் பெற்ற புள்ளிகள் பற்றிய விபரத்தினை அவர்களுக்கு அனுப்பிவைக்கும் மாவட்ட அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பரீட்சார்த்தியொருவர் எழுத்துப் பரீட்சைக்கு/நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பினும் அத்தகைய அனுமதி காரணமாக அவர் தகைமையுடையவர் எனக் கருத்திற்கொள்ள முடியாது. ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ அல்லது பரீட்சையின் எந்நிலையிலுமோ இப்பிரமாணத்தின்படி தகைமையற்றவர் எனக் கண்டால் அவரின் பரீசார்த்தத் தன்மை இரத்துச்செய்யப்படும்.

6.4 எழுத்துப் பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றுவதற்கு அரசினால் எந்தவிதப் படிகளும் செலவுகளும் வழங்கப்படமாட்டாது.

**7. தெரிவு செய்யப்படும் முறை :**

7.1 சேர்த்துக்கொள்ளப்படும் வருடத்தில் ஒவ்வொரு மொழி மூலத்திலும் விவசாயக் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரிகளைக் கொண்டுள்ள மாவட்டங்களிலிருந்து ஒவ்வொரு மொழி மூலத்திலும் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். அதன் பின்னர் ஒவ்வொரு மொழி மூலத்திற்குமான அம்மாவட்டத்தின் விண்ணப்பதாரிகளிலிருந்து போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் உயர் திறமை காட்டியுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவர். அவ்வாறான தெரிவின்போது கீழ்க்காணும் விடயங்களும் கருத்தில் எடுக்கப்படும்.

7.2 க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய மாவட்டமே அவ்விண்ணப்பதாரியின் மாவட்டமாக கொள்ளப்படும். க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய மாவட்டத்தின் இலக்கத்தை அறிவதற்கு இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் காணப்படும் இணைப்பு இல. 01 ஐ பார்க்கவும். இவ்விலக்கத்தை விண்ணப்பப்படிவத்தில் 5 ஆவது கேள்வியை பூர்த்திசெய்ய பயன்படுத்தவும்.

7.3 விவசாயம், விவேகப் பரீட்சை ஆகிய இரு வினாத்தாள்களிலும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் மாவட்ட அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சித்தியடைந்தவர்கள் பட்டியலில் மாவட்ட மட்ட தேர்வில் விண்ணப்பப்படிவத்தின் 5 ஆவது கேள்விக்கான மறுமொழிகள் அடிப்படையாகக் கொள்ளப்படும். க. பொ. த. (உ. த.) உயிரியல் பிரிவில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி பெற்று போட்டிப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தவர்கள் முன்னுரிமை அடிப்படையில் முதலில் தெரிவு செய்யப்படுவர். குறித்த மாவட்டமொன்றில் குறித்த மொழி மூலத்திற்கு அவ்வாறு சித்தியடைந்தவர்கள் இல்லாதவிடத்து அல்லது அவ்வாறான விண்ணப்பதாரிகள் போதியளவு காணப்படாதவிடத்து மாத்திரம் அம்மாவட்டத்திலிருந்து அம்மொழி மூலத்திற்கு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளின் தொகைக்கு பொருந்தும் வகையில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரு பாடத்தில் அல்லது இரு பாடங்களில் சித்தியடைந்த மாவட்டத்தை சேர்ந்த விண்ணப்பதாரிகளின் போட்டிப் பரீட்சையில் மிகத் திறமையாக சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவர். இத்தெரிவு கட்டாயமாக 7.1, 7.2 இல் குறிப்பிட்டபடி மாவட்ட அடிப்படையில் போட்டிப் பரீட்சையில் திறமை அடிப்படையில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையில் மேற்கொள்ளப்படும். குறித்த வருடத்தில் ஒவ்வொரு விவசாயக் கல்லூரிக்கும் அனுமதிக்கப்படும் மாணவ, மாணவியர் தொகை, அக்கல்லூரிகளில் ஆண்/பெண் விடுதி வசதிக்கேற்பவும் பயிற்சி வசதிக்கேற்பவும் தீர்மானிக்கப்படும். எனவே மாணவர் தெரிவின்போது போட்டிப் பரீட்சையின் இரண்டு பாடங்களிலும் பெற்ற கூட்டுப் புள்ளிகளின் வெட்டுப்புள்ளி மட்டும் குறித்த மாவட்டத்தில் ஆண், பெண் விண்ணப்பதாரிகளிடையே பாடநெறியை பயிலும் மொழி மூலத்திற்கேற்பவும் வேறுபடும். ஏதாவதொரு மாவட்டமொன்றில் போதியளவு தகுதியுடைய மாணவர் தொகை காணப்படாதவிடத்து குறித்த மொழி மூலத்தில் கல்லூரிகளின் அனுமதியை பூரணப்படுத்துவதற்காக சம எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் ஏனைய மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்படுவர்.

7.4 இதற்கேற்ப மாவட்டத்தில் போட்டிப் பரீட்சையில் இரு பாடங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்ற குறித்த அளவான விண்ணப்பதாரிகள் அவர்களின் கல்விச் சான்றிதழ்களையும் ஏனைய சான்றிதழ்களையும் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சையின்போது விண்ணப்பதாரிகள் தங்களது சான்றிதழ்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். **நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது**. விவசாயக் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்படும் எண்ணிக்கையைவிட அதிகளவான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**8. "குசுமா லக்ஸ்மி கருணாதிலக்க" ஞாபகார்த்தப் புலமைப் பரிசில் :**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் வினாத்தாள் I, II என்பனவற்றில் அதிகூடிய புள்ளியைப் பெறும் எந்த மொழியிலேனும் பயிற்சியை மேற்கொள்ளும் பெண் விண்ணப்பதாரி ஒருவருக்கு மேற்படி புலமைப் பரிசில் அதன் விதிகளுக்கு அமைய 2 வருட காலத்திற்கு வழங்கப்படும். புலமைப் பரிசிலைப் பெற்றவருக்கு குண்டசாலை விவசாயக் கல்லூரியில் பயில சந்தர்ப்பம் வழங்கப்படும். இப்புலமைப் பரிசின் வருடாந்தப் பெறுமதி 10,000 ரூபா ஆகும்.

கலாநிதி றொஹான் விஜேகோன்,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை.

***இணைப்பு இல. - 1***

**மாவட்டத்தின் பெயர்களும் அவற்றின் இலக்கமும்**

(7.2 பந்திக்கு ஏற்புடையதாகும்)

| மாவட்ட இல. | மாவட்டம் | மாவட்ட இல. | மாவட்டம் |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | 14 | கம்பஹா |
| 02 | பதுளை | 15 | களுத்துறை |
| 03 | மட்டக்களப்பு | 16 | மாத்தளை |
| 04 | கொழும்பு | 17 | நுவரெலியா |
| 05 | காலி | 18 | மன்னார் |
| 06 | யாழ்ப்பாணம் | 19 | முல்லைத்தீவு |
| 07 | கண்டி | 20 | அம்பாறை |
| 08 | குருநாகல் | 21 | புத்தளம் |
| 09 | மாத்தறை | 22 | பொலன்னறுவை |
| 10 | திருகோணமலை | 23 | மொனராகலை |
| 11 | வவுனியா | 24 | கேகாலை |
| 12 | இரத்தினபுரி | 25 | கிளிநொச்சி |
| 13 | ஹம்பாந்தோட்டை | | |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப்பரீட்சை - 2015**
விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா பாடநெறி - 2016/2018

**(Competitive Examination for Admission to Sri Lanka School of Agriculture – 2015**
**Diploma in Agriculture Production Technology - (2016/ 2018)**

..........................................................
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1.

| பரீட்சைக்குத் தோற்றும் நிலையம் அமைந்துள்ள நகரம் : | பரீட்சை நிலைய இலக்கம் |
|---|---|
| 1 ஆம் தெரிவு ................................ | .......................... |
| 2 ஆம் தெரிவு ................................ | .......................... |

(வர்த்தமானி அறிவித்தலின் முதலாவது பந்திக்கு அமைய)

2.

| | | |
|---|---|---|
| பரீட்சைக்குத் தோற்றும் மொழி :<br>சிங்களம் - 2<br>தமிழ் - 3 | .......................... | |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.

| | |
|---|---|
| பாடநெறியை பயிலுவதற்கு விரும்பும் மொழி :<br>சிங்களம் - 2<br>தமிழ் - 3 | .................... |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. பால் :

| | |
|---|---|
| ஆண் 0<br>பெண் 1 | ............. |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5.

| | |
|---|---|
| க.பொ.த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் :<br>..................... | மாவட்ட இலக்கம் :<br>........... |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

(7.2 பந்திக்கு ஏற்ப இணைப்பு இலக்கம் 1 ஐப் பார்க்க)

6.

| | |
|---|---|
| க.பொ.த. (உ.த.) உயிரியற் பிரிவில் தோற்றி சித்தி பெற்றுள்ள பாடங்களின் எண்ணிக்கை (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)<br>03 பாடங்கள் ஓர் அமர்வில் - 3<br>02 அல்லது 01 பாடம் ஓர் அமர்வில் - 2 | சித்தியடைந்த பாடங்களுக்கேற்ப உரிய இலக்கம்<br>.......................... |

(3.1 பந்திக்கு ஏற்ப)

7. (அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில், முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு தெளிவான எழுத்தில்) :-----.
(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு) : ----.
(உதாரணம் : ANANDA, K. C. B.)

(ஆ) (i) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (தமிழில்) :-----.
(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ----.

8. (i) முழுமையான முகவரி :-----.
(ii) பரீட்சை அனுமதிப்பத்திரத்தினை அனுப்ப வேண்டிய முகவரி :----.
(ஆங்கில பெரிய எழுத்தில்) :-
(iii) தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் :----.

9. (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய பாடசாலையும் முகவரியும் :----.
(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் (தமிழில்) :----.
(இ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் (ஆங்கிலத்தில்) :----.

10. தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

11. (அ) தற்போது வதியும் தேர்தற்தொகுதி (தமிழில்) :-----.
(ஆ) தற்போது வதியும் தேர்தற் தொகுதி (ஆங்கிலத்தில்) :-----.

12. பிறந்த திகதி : ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

13. 2015.06.29 ஆந் திகதி அன்று வயது :
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

14. இப்பகுதியை பூரணப்படுத்த முன் வர்த்தமானி அறிவித்தலை கவனமாக வாசித்தல் வேண்டும்.

(அ) இந்த அறிவித்தலின் 3.1 ஆம் பந்திக்கு ஏற்ப க. பொ. த. (சா. த.) பரீட்சையில் விண்ணப்பதாரி சித்தியடைந்த ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. | | |
| | | 2. | | |
| | | 3. | | |
| | | 4. | | |
| | | 5. | | |
| | | 6. | | |
| | | 7. | | |
| | | 8. | | |
| | | 9. | | |
| | | 10. | | |

(ஆ) வர்த்தமானி அறிவித்தலின் 3.1 பந்திக்கு அமைய கட்டாயம் திறமைச் சித்தி பெறவேண்டிய நான்கு பாடங்கள் தொடர்பான விபரங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. தமிழ்மொழி | | |
| | | 2. கணிதம் | | |
| | | 3. விஞ்ஞானம் | | |
| | | 4. விவசாயம் | | |
| | | 5. சமூகக்கல்வி | | |
| | | 6. வரலாறு | | |
| | | 7. வாழ்க்கைத் திறன் மற்றும் குடியுரிமைக் கற்கை | | |
| | | 8. விவசாய உணவுத் தொழில்நுட்பம் | | |
| | | 9. பூங்கனியியல் விஞ்ஞானம் | | |

(இ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியற் பிரிவில் தோற்றினீரா? ஆம்/இல்லை (தேவையற்ற சொல்லை கீறிவிடவும்)

(ஈ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. உயிரியல் | | |
| | | 2. விவசாயம் | | |
| | | 3. பௌதீகவியல் | | |
| | | 4. இரசாயனவியல் | | |
| | | 5. விலங்கியல் | | |
| | | 6. தாவரவியல் | | |

(உ) மேலேயுள்ள தகைமைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பவும். (மூலப்பிரதியை அனுப்பத் தேவையில்லை)
சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளனவா ? :-----.

15. (i) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் (தமிழில்) :-----.
(ii) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் :-----.
(ஆங்கில பெரிய எழுத்தில்)

16. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரங்கள் :
16.1 பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
16.2 பற்றுச்சீட்டின் திகதி மற்றும் நிலையம் :-----.
16.3 காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் நிலையம் :----.
(இது கட்டாயம் பேராதனை தபால் நிலையமாக இருத்தல் வேண்டும்).

பற்றுச்சீட்டின் மேல் விளிம்பை மாத்திரம் இங்கு பசையால் ஒட்டுதல் வேண்டும். காசுக்கட்டளையின் நிழற்படப் பிரதியொன்றை கட்டாயமாக தம் வசம் வைத்துக்கொள்ளவும்.

**பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாகவும் தமிழ், விஞ்ஞானம், கணிதம் என்பவற்றிற்கு திறமைச் சித்தியும் விவசாயம் அல்லது வரலாறு அல்லது வாழ்க்கைத் திறன் மற்றும் குடியுரிமைக் கற்கை அல்லது விவசாய உணவுத் தொழில்நுட்பம் அல்லது பூங்கனியியல் விஞ்ஞானம் ஆகிய 6 பாடங்களில் ஒன்றிற்கு திறமைச் சித்தியும் உயர்தரத்தில் உயிரியற் பிரிவில் பயின்று வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட தகைமைகளை பெற்றுள்ளேன் என உறுதியளிக்கிறேன். இதிலடங்கிய விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படுமிடத்து நான் தகைமை இழப்பேன் என்பதையும் அறிவேன். பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு அமைவாக நடக்க நான் சம்மதிக்கிறேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**கல்வித் தகைமைகளையும் கையொப்பத்தையும் உறுதிப்படுத்தல்**

(திணைக்களத் தலைவர் ஒருவரால், பாடசாலை அதிபர் ஒருவரால், சமாதான நீதவானால், சட்டத்தரணியால் அல்லது வருடத்திற்கு திரட்டிய சம்பளமாக 2,30,060 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)

மேலே கையொப்பம் இட்ட திரு./திருமதி/செல்வி ............................................. என்பவரை நான் நன்கு அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள க. பொ. த. (சா. த.), க. பொ. த. (உ. த.) தகைமைகளை பெற்றுள்ளார் என வர்த்தமானி அறிவித்தலையும் கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை பரீட்சித்து அத்தாட்சிப்படுத்துகிறேன். மேலும் உரிய பரீட்சை கட்டணங்களை செலுத்தியுள்ளார் என்பதையும் அதற்கான பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டியுள்ளார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

5-644

**கட்டடத் திணைக்களம்**

(i) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்), தரம் III

(ii) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்), பயற்றுவித்தல் தரம்

கட்டடத் திணைக்களத்தின் மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து கட்டடப் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கட்டடத் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வ கடமைகள் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்தலங்கள் நாடு முழுவதும் பரந்துள்ளதுடன், மேற்படி வேலைத்தலங்களின் நிர்மாணிப்புகளை கண்காணிப்புச் செய்வதற்காக தொழில்நுட்ப அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றார்கள்.

2. இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய ஏ4 அளவான தாளின் இருபக்கங்களையும் பயன்படுத்தி தயார் செய்து கொண்ட விண்ணப்பப்படிவத்தை 2015.06.12 ஆந் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம், மலலசேகர மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கட்டடத் திணைக்களத்தின், இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) தரம் III, இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) - பயிற்றுவித்தல் தரம் பதவிக்கு ஆட்சேர்ப்பு பரீட்சை" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். தாமதித்துக் கிடைக்கின்ற, தெளிவற்ற மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்படாதுள்ள விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**3. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

3.1 இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையது மாகும். விதவை அநாதை / தபுதாரர் அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகைகளைச் செலுத்த வேண்டும்.

3.2 அரசாங்க சேவையின் நியமனங்கள் தொடர்பான தாபன விதிக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 10 – 12 வரையான பிரிவுகளின் நடைமுறை விதிகளும் இதற்கு ஏற்புடையனவாகும்.

3.3 தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களக் கட்டளைகளுக்கும், காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற வேறு ஒழுங்கு விதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் இணங்கியொழுக வேண்டும்.

**4. பொதுவான தகைமைகள் :**

4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

4.2 சிறந்த நன்னடத்தையுடையவராகவும், நல்ல தேகாரோக் கியத்துடனும் இருத்தல் வேண்டும் ;

4.3 ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற அலுவலர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற வேண்டும் ;

4.4 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

**5. சகல பதவிகளுக்கும் தேவையான கல்வித் தகைமைகள் :**

5.1 கல்விப் பொதுத் தராதர பத்திர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (6) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

5.2 உரிய துறைக்குரித்தான பாடங்கள் இரண்டுடன் விஞ்ஞானப் பாடப் பிரிவில் மூன்று பாடங்களில் கல்விப் பொதுத் தராதர பத்திர (உ. த.) பரீட்சையில் (பொதுவான பரீட்சை தவிர) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாடவிதானத்தின் கீழ் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருப்பது போதுமானதாகும்.)

**6. தொழில்சார் தகைமைகள் :**

6.1 இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்/மின்/பொறிமுறை), தரம் III

மேலே 5.0 இலுள்ள கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக உரிய துறைசார்ந்ததாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில் சார் தகைமைகளில் ஒன்றினைப் பூர்த்தி செய்து விண்ணப்பப் படிவம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் அல்லது அம்பாரை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா,

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் டிப்ளோமா,

அல்லது

(iii) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா,

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப் படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா,

அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப் படுகின்ற பொறியியல் பரீட்சையின் 1 ஆம் பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்,

அல்லது

(vi) தொழில் துறைக்கு ஏற்புடையதாக தேசிய தொழில்சார் தேர்ச்சி (NVQ) 6 மட்டத்தின் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்,

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப் பட்டுள்ள தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கியுள்ள நிறுவனங்களிடம் வினவி கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப் படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

6.2 இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) - (பயிற்றுவித்தல் தரம்)

மேலே 5.0 இன் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக உரிய துறை சார்ந்ததாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளில் ஒன்றினைப் பூர்த்திசெய்து, விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(i) மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து இப்பதவிக்கு ஏற்புடைய துறைசார் பாடநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து தேசிய தொழில்நுட்பச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii) மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து இப்பதவிக்கு ஏற்புடைய துறைசார் கைத்தொழில் தொழில்நுட்பவியலாளர் களுக்கான தேசிய சான்றிதழ் பாடநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து தேசிய தொழில்நுட்பச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(iii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப் பட்டுள்ள தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கியுள்ள நிறுவனங்களிடம் வினவி கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு.**- மேலே 5.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் மற்றும் 6.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) - பயிற்றுவித்தல் தரத்திற்கு (ஒரு வருட பயிற்சி) ஏற்புடைய குறித்த தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள், சேவைக்குரிய பாடவிதானங்களுக்கு அமைய பெற்றுக்கொள்ளும் ஒரு வருட கோட்பாட்டு ரீதியான மற்றும் செயல் ரீதியான பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து, குறித்த பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப நிலையில் வைக்கப்படுவார்கள்.

**7. தெரிவு செய்யும் அடிப்படை :**

7.1 ***எழுத்து மூலமான பரீட்சைக்குரிய நிபந்தனைகள்.***- இதற்கான எழுத்து மூலப் பரீட்சை கட்டடத் திணைக்களம் சார்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், அவர் அறிவிக்கும் தினத்தில் பரீட்சை நடாத்தப்படும். அவர் விதிக்கின்ற சட்டங்கள், விதிகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படுதல் வேண்டும்.

7.2 தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்து மூலமான பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும், ஆகக் குறைந்தது 40 வீதமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

மேற்படி பரீட்சையில் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட ஒழுங்குவரிசையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதிவாய்ந்தவர்கள் குறித்த புள்ளிகளின் ஒழுங்குவரிசையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படு வார்கள். நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படுவதில்லை என்பதுடன் தகைமைகள் மாத்திரம் பரிசீலனை செய்யப்படும்.

7.3 எழுத்து மூலமான பரீட்சைக்கு ஏற்புடைய விடயங்கள் பின்வருமாறாகும்.

| வினாத்தாள் | நேரம் | உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்குப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. உளச்சார்புப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. விடய ரீதியான தொழில்நுட்பப் பரீட்சை | 3 மணித்தியாலம் | 100 | 40 |

| வினாத்தாளின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. உளச்சார்புப் பரீட்சை | புரிந்துகொள்ளும் சக்தி, தர்க்க ரீதியான அறிவு, சரியாக தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல், எண்கள் மற்றும் கணித சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல், மொழித் தொடர்கள், அட்டவணை, படம், குறிப்பு, வரைபடத்தைப் பயன்படுத்தல். |
| 2. விடய ரீதியான தொழில் நுட்பப் பரீட்சை | தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) பதவி<br>தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) - பயிற்றுவித்தல் தரம்<br>மானி, கட்டட வரைபடம் பற்றிய அறிவு, அடிக்கல், மண் வகை, கட்டடப்பொருட்கள், கட்டட ஒழுங்கமைப்பும், நிறைவு செய்வதும், கட்டட வரைபடங்களின் மூலம் அளவைகளைப் பெற்றுக்கொள்ளல், மதிப்பீடுகளைத் தயார் செய்தல், நீர் வழங்கலும், கழிவுநீர் அகற்றும் வடிகாலமைப்பும். |

7.4 எழுத்து மூலப் பரீட்சை சிங்களம்/தமிழ் ஆகிய இரண்டு மொழிகள் மூலமும் நடாத்தப்படும்.

8. **ஆட்சேர்ப்புச் செய்தல்**.- மேலே 5.0 மற்றும் 6.0 இன் கீழ் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதுடன், எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரர்கள் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) மற்றும் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) - பயிற்றுவித்தல் தரம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

9. **சம்பள அளவுத்திட்டம்**.- பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006(iv) இன் MN-3-2006A கீழ், இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) தரம் III - ரூபா 15,005 – 4 x 180– 6 x 240 – 11 x 320 – 20 x 360 – ரூபா 27,885.

இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) பயிற்றுவித்தல் தரம் - ரூபா 12,920- 1 x 120- ரூபா 13,040.

10. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். விண்ணப்பதாரர்கள் திருப்பிச் செலுத்தப்படாத 1,000 ரூபா பரீட்சைக் கட்டணத்தை நாடு முழுவதிலும் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகத்தின் மூலமும் (உப தபால் அலுவலகங்கள் தவிர) "SLIDA" கணக்கிற்கு செலுத்த வேண்டும் என்பதுடன், இந்தக் கொடுப்பனவு தொடர்பாக வழங்கப்படுகின்ற ரசீதின் இலக்கத்தை பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் 12 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடுதல் வேண்டும்.

குறித்த தபால் அலுவலகத்தில் "SLIDA" கணக்கிற்கு கொடுப்பனவைச் செலுத்துவதற்கான படிவத்தை நிரப்பும் போது, பணத்தைப் பெற்றுக் கொள்பவராக "SLIDA" என்றும், பணம் பெற்றுக் கொள்பவரின் முகவரி எனும் இடத்தில் உங்களுக்குரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரையும் குறிப்பிடுக. (குறியீட்டுப் பெயர்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.)

| | பரீட்சையின் பெயர் | குறியீட்டுப் பெயர் |
|---|---|---|
| 1 | இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்), தரம் III | TOc |
| 2 | இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்), பயிற்றுவித்தல் தரம் | TOtg |

மேலும், கணக்கிற்கு பணம் செலுத்தும் போது பணம் அனுப்புபவராக விண்ணப்பதாரரின் பெயரையும், பணம் அனுப்புபவரின் முகவரி எனும் இடத்தில் விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும், குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

11. யாராயினுமொரு விண்ணப்பதாரரின் விண்ணப்பப்படிவத்தில் யாதாயினும் தவறான, பொய்யான கூற்றுக்கள் இருப்பதன் காரணமாக அவர் தகைமையற்றவராக்கப்பட முடியும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட பின்னர் இது பற்றி அறியக்கிடைக்கும் பட்சத்தில் அவர் பதவிநீக்கம் செய்யப்படவும் முடியும்.

12. **கையொப்பத்தை சான்றுப்படுத்தல்**.- விண்ணப்பதாரர்கள் தமது மாதிரி கையொப்பத்தை, அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ஓய்வுபெற்ற அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர், அல்லது 240,360 ரூபா அல்லது அதற்கு மேலான வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் அல்லது நிரந்தர பதவிநிலை அலுவலர் அல்லது நாயக்க தேரர் அல்லது வேறு மதவழிபாட்டுத் தளமொன்றிற்குப் பொறுப்பான மதத் தலைவர் அந்தஸ்தில் உள்ளவராகக் கருதப்படக்கூடிய ஒருவர் மூலம் சான்றுப் படுத்திக் கொள்ளல் வேண்டும். ஏற்கெனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

இதில் குறிப்பிடப்படாதுள்ள விடயமொன்று தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளும் அலுவலராக கட்டடப் பணிப்பாளர் நாயகம் செயற்படுவார்.

எம். ஆர். ஜெயசந்திரன்,
கட்டடப் பணிப்பாளர் நாயகம்.

கட்டடத் திணைக்களம்,
செத்சிறிபாய,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கட்டடத் திணைக்களம்**

(i) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்), தரம் III ☐
(ii) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்), பயிற்றுவித்தல் தரம் ☐

(உரிய இலக்கத்தைக் கொண்ட கூண்டில் ✓ அடையாளத்தை இடுக)

☐
அலுவலக உபயோகத்திற்கு

1. (i) முழுப் பெயர் :----.
(ii) முதலெழுத்துக்களுடனான பெயர் (சிங்களம் / தமிழ் மொழியில்) :----.
(iii) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2. முகவரியும், தொலைபேசி இலக்கமும் :
(i) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
(ii) சொந்த முகவரி :----.
(iii) தொலைபேசி இலக்கம் :----.
(iv) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :----.

3. பால் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தை கூண்டில் எழுதுக)

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
☐☐☐☐☐☐☐☐☐☐

5. (i) பிறந்த திகதி :

ஆண்டு : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

(ii) விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் வயது :

வருடங்கள் : [ ][ ] மாதங்கள் : [ ][ ] நாட்கள் : [ ][ ]

6. திருமணமானவரா /திருமணமாகாதவரா ? என்பது:

திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2 [ ]

(உரிய இலக்கத்தை கூண்டில் எழுதுக)

7. க.பொ.த. (சா. த.) பரீட்சையின் விபரங்கள் (முதல் அமர்வு) (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :

(i) பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டும் மாதமும் :----.
(ii) விண்ணப்பதாரியின் பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| ................................. | ........... | ................................. | ........... |
| ................................. | ........... | ................................. | ........... |
| ................................. | ........... | ................................. | ........... |

8. க.பொ.த. (சா. த.) பரீட்சையின் விபரங்கள் (இரண்டாம் அமர்வு) அவசியமாயின் மாத்திரம் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :

(i) பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டும், மாதமும் :----.
(ii) விண்ணப்பதாரியின் பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| ................................. | ........... | ................................. | ........... |
| ................................. | ........... | ................................. | ........... |
| ................................. | ........... | ................................. | ........... |
| ................................. | ........... | ................................. | ........... |
| ................................. | ........... | ................................. | ........... |

9. க.பொ.த. (உ. த.) பரீட்சையின் விபரங்கள் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :

பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.
விண்ணப்பதாரியின் பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| ................................. | ........... | ................................. | ........... |
| ................................. | ........... | ................................. | ........... |

10. ஏனைய தகைமைகள் : தொழில்நுட்ப /தொழில்சார் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :----.

11. உரிய துறை தொடர்பாக பெற்றுள்ள அனுபவம் :----.
மேலே 10,11 இற்குரிய தகைமைகளை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ்களை இணைப்பாக சமர்ப்பிப்பது அத்தியாவசியமாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

12. பரீட்சைக் கட்டணம் :
பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம் :

| S | L | D | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

1,000 ரூபா பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பற்றுச் சீட்டை இங்கே ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை உங்கள் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.)

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற .................. (முழுப் பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், ................... திகதி அவர் என் முன்னிலையில் கையொப்ப மிட்டார் என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
சான்றுப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

சான்றுப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர்:----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
உத்தியோகபூர்வ முத்திரை :

14. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். மேலும், இதில் உள்ளடங்கும் யாதாயினுமொரு தகவல் பிழையானதென்றும் உண்மைக்கு மாறானதென்றும் கண்டறியப்படும் பட்சத்தில், அவ்வாறு கண்டறியப்படுவது பதவிக்குத் தெரிவு செய்யப்பட முன்னர் இடம்பெறுமாயின் நான் தகுதியற்றவனாவேன் என்றும், நியமனம் பெற்ற பின்னர் கண்டறியப்பட்டால் எந்தவொரு நட்டஈடும் செலுத்தப்படாது பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்**

மேற்படி விண்ணப்பதாரரான திரு./திருமதி/செல்வி .................... தற்போது இந்த அமைச்சில் /திணைக்களத்தில் .............................. ............................................ ஆக நிரந்தர / தற்காலிக /அமய ஊழிய ராக சேவையாற்றுகின்றார் என்றும், இப்பதவிக்கு இவர் தெரிவு செய்யப்படுவாராயின், அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்றும் அறியத்தருகின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பதவி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை).

5-757

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.